**செய்தி வெளியீடு எண்: 353** **நாள்: 20.05.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

ஈழுவா மற்றும் தியா சமுதாயமக்களுக்கு பிற்படுத்தப்பட்டோர் சாதிச்சான்றிதழ் வழங்கக் கோரும் முறையீடுகளை ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கக் கோரிஅரசாணை (நிலை) எண்.39, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, நாள் 21.04.2020–ல் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல்தலைமைச் செயலாளர் அவர்களை தலைவராக நியமித்து நான்கு உறுப்பினர்கள் குழு அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி பொருள் தொடர்பாக குழுவிற்கு கோரிக்கைகள் / முறையீடுகள் மற்றும் ஆவணங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் 26.5.2020 க்குள்அந்தந்த மாவட்டஆட்சியரிடம் அல்லது குழுவின் உறுப்பினர்–செயலர் / மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்குநர், எழிலகம் விரிவாக்கக் கட்டடம், 2–ம் தளம் ,சேப்பாக்கம், சென்னை–5 அவர்களுக்கு எழுத்துப் பூர்வமாக தபால் / மின்னஞ்சல் (dir-combc@tn.gov.in) மூலமாக அளிக்கலாம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**